உ

தமிழ்த்தாய் வாழ்க

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு

பத்தொன்பதாம் துணர்

சுபானு ஆண்டு—1943, 44.

சித்திரைத் திங்கள் முதல் கார்த்திகைத் திங்கள் முடிய

பொழிற்றொண்டர்.

கரந்தைக் கவியரசு, R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்.

மார்கழித் திங்கள் முதல்

பொழிலாசிரியர்.

கோ. சி. பெரியசாமிப் புலவர் அவர்கள்.

உ

தமிழ்ப் பொழில்

பத்தொன்பதாம் துணர் :— உள்ளுறை.

1. பேராசிரியர் உரையாக்கம்
திரு. பண்டிதர். க. வேந்தனார் அவர்கள்.

2. குறிஞ்சிப்பாட்டு. 9, 26, 57,
,, வித்துவான். A. S. நாராயணசாமி நாயுடு அவர்கள்.

3. கோடீச்சரம்
,, வை. சுந்தரேச வாண்டையார் ,,

4. அரக்கர் தமிழரா?

5. தொல்காப்பியம்-பொருள், 129, 133, 137, 141, 145, 149, 153.
,, பேராசிரியர். ச. சோமசுந்தரபாரதியார் ,,

6. தமிழவேளின் தனி மாண்பு, 29
,, வித்துவான். அன்பு கணபதி ,,

7. மாடலன் என்னும் மாமறை முதல்வன். 137
,, பேராசிரியர். ச. சோமசுந்தர பாரதியார் ,,

8. வள்ளுவர் குறளும் தமிழ் நூன்மரபும், 49, 71, 93
,, பேராசிரியர். ச. சோமசுந்தர பாரதியார் ,,

9. தமிழ்த்தாய்த் திருப்பணி. 75
,, ஆசிரியர். திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை. ,,

10. ஆறு பிரத்தியயங்களின் விளக்கம். 81, 98, 122, 136, 163.
,, வித்துவான். வே. வேங்கடராசலு ரெட்டியார் ,,

11. *தமிழொலி. 89*

திரு. வித்துவான், தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, M. A., B. L., M. O. L. அவர்கள்

12. *'ந'. 101, 120.*

,, சி. நடராசன் ,,

13. *தமிழ்ப் பொழில் சேர்க்கை.*

,, வி. கலியாணசுந்தர முதலியார் ,,

14. *பண்டுமுளைப்பது. 111*

,, இ. மு. சுப்பிரமணிய பிள்ளை ,,

15. *வாழ்வாவது யாது? 113*

,, உழவன்

16. *வழக்குஞ் செய்யுளும். 115*

,, வித்துவான். சுப. மாணிக்கம் B.O.L. ,,

17. *வெள்ளி வீதியார். 128*

,, உழவன் ,,

18. *வைணவம். 133*

,, N. துரையரங்கராமானுசதாசர் ,,

19. *மெய்கண்டார் நூல் மொழிபெயர்ப்பா? தமிழ் முதல் நூலா? 141, 221*

,, பேராசிரியர். ச. சோமசுந்தரபாரதியார் ,,

20. *தமிழ்ப்பாட்டும் திரு. சி. ஆர். சீனிவாசனும். 138*

வழக்கறிஞர் திரு. T. P. வேதாசலம் பிள்ளை ,,

21. *பண்டைநாளைச் சேர மன்னர்கள். 153, 175*

,, வித்துவான். ஔவை. சு. துரைசாமி பிள்ளை ,,

22. *கலைச்சொல்லாக்கம். 169, 223.*

,, அ. இராமசாமிக் கவுண்டர் அவர்கள், M. A., L. T.,

23. *சிலப்பதிகாரத்தில் சில நாடகமாந்தர். 180*

காலஞ்சென்ற. திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், M. A.

24. திருவாசகத்தில் ஒருவாசகம். 184
திரு. மகாமகோபாத்தியாய, முதுபெரும்புலவர், பண்டித மணி மு. கதிரேசச்செட்டியார் அவர்கள்

25. அண்ணுமலைப் பல்கழகப் பட்டமளிப்பு விழாச்சொற்பொழிவின் சுருக்கம். 190, 233.
,, சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள்

26. சேக்கிழார் பிள்ளைத்தமிழ். 199.
தருமையாதீன வித்துவான், பாலகவி, வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்

27. இலக்கியப் பெண்மணிகள் பதிபக்தி. 227
,, வித்துவான் திரு சிவ. பார்வதியம்மையார் அவர்கள்

28. சென்னைத் தமிழிசை மாநாட்டுச் சொற்பொழிவு. 203
,, சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் ,,

29. முன்னுரைச் சுருக்கம். 235
,, மகாமகோபாத்தியாய, முதுபெரும்புலவர் பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியாரவர்கள்.

30. சிறு சோறு. 247.
,, வித்துவான், வே. வேங்கடராசலு செட்டியார் அவர்கள்

31. பொருநராற்றுப்படை. 251.
,, புலவர். வி. அ. அரங்கசாமி ,,

32. சென்னைத் தமிழிசை மாநாட்டுத் திறப்பு விழாவுரை. 255.
,, இராசா, சர். அண்ணுமலைச் செட்டியார் ,,

33. நாடகக்கலை மாநாட்டுத் தலைமையுரையின் சுருக்கம். 260.
சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் ,,

34. செய்திகளும் குறிப்புக்களும்
ஓர் அறிவிப்பு. 21
தஞ்சை ஜில்லா தமிழிசை மாநாடு. 24

35. பொழிற்றெண்டர் குறிப்புக்கள். 1, 21, 41, 65, 85, 105, 125, 145.
பொழிலாசிரியர் கருத்துரைகள், 167, 183, 188, 189 191, 215, 239.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் யிகூ } சுபானு—சித்திரை 1943—ஏப்பிரல் { மலர் க

பொழிற்றொண்டர் குறிப்புக்கள்

செந்தமிழ்த் தாயின் திருவருளால் நமது பொழிலின் சுபானு சித்திரை மலர்,

உலகெலாம் வாழ்க! உறுபோர் ஒழிக!
ஓங்குக ஒற்றுமை! நீங்குக வேற்றுமை!
பசி பிணி யறுக! பன்னலம் உறுக!
கலைநலம் மக்கள் காட்சியின் மிளிர்க!
கடவுட் பற்றுக் கனிந்துளத் தொளிர்க!—என்றெலாம்

விரியும் வாழ்த்துரையாகிய நன்மணம் கொண்டு தோன்று கின்றது. பொழிலன்பர்கள் மனமுவந்து ஏற்று மகிழ்ந்து பொழிலை என்றும் புரந்து வருவார்களாக. சென்ற பங்குனி மலரிற் குறித்த அளவிற்கேற்ப, சுபானு ஆண்டிற்குரிய தாள்கள் பெரிதும் அரிதின் ஈட்டப்பெற்றுள. கட்டுரைப்புலவர்கள் எட்டுணையும் தளர்விலாது புரந்துவர முனைந்துள்ளனர். அம் மலரில் உள்ள வேண்டுகோளின்படி அன்பர் பலர் முன்தொகை அனுப்பி வாழ்த்திநிற்கின்றனர். சிலர், தத்தம் அன்பர்கட்கும் பொழிலின் தொண்டு, பொருணிலைகளை எடுத்துக்காட்டிச் சிற்சிலரைப் புது உறுப்பினராகச் சேர்த்துதவியிருக்கின்றனர். இவர்கட்கெல்லாம் சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்து உரியதாகும்.

இலங்கையிலிருந்து திரு. கந்த. முருகேசர் என்னும் செந்தமிழன்பர் எழுதுவது தமிழ் மக்கள் எல்லோரும் பாராட்டற் குரியதாகும்.—'தமிழகம்,' புலோலி தெற்கு. 31—3—43

ஐய! நான் தமிழ்ப் பொழில் உறுப்பினருள் ஒருவன்...... தமிழ் நாட்டில், கோடிக்கணக்கான தமிழர் இருக்கும் நாட்டில், தமிழர் ஆக்கங்கருதி வெளிவரும் ஒரு வெளியீட்டிற்கு.......... நூற்றுவரே உறுப்பினர் எனின், தமிழர்க்கு இதனினுங்குக் (குறை) பிறிதும் உளது கொல்? அடுத்த சுபானு ஆண்டிற்குப் பொழில் உறுப்பினராக இன்னும் மூவரைச் சேர்த்துளேன். அவர்களதும் எனதும் அடுத்த ஆண்டுப் பொழில் வரிப்பணம் ரூ. 12 தங்கள் பெயருக்கு மணியார்டர் செய்துளேன்.

அன்பரீர்! இலங்கையில், நம் உடன்பிறப்பினர் இதுகாலை உணவுப்பொருள் முதலியவற்றிற்கு எய்தும் அல்லல்கள், நாம் நினைப்புழிக் கண்ணீர் பெருக்குவன. இந்நிலையில் நம் அன்பர் செய்துள பேருதவியை நோக்குவீர்களாக.

தமிழ்ப் பேரன்பர்களே! இங்ஙனமே நீங்கள் ஒவ்வொருவரும் தமிழ்ப்பொழிலுக்கு உறுப்பினராகியும், உறுப்பினரைச் சேர்த்தும், கட்டுரைகள், எழுதியும் நம் தாய் மொழிக்குத் தொண்டு செய்ய முன்வருவீர்களாக. இதுவே **தமிழவேள்** புகழுடம்பில் நின்று உங்கட்கெல்லாம் புத்தாண்டு வாழ்த்துக் கூறி வேண்டும் உரிமை வேண்டுகோளாகும். நம் தமிழ்த்தாய், தன் மக்களுள் இன்னும் பலரை இத்தொண்டிற் கூட்டிப் பொழிலின் நலம் விரிந்து சிறப்புறச் செய்தருளும்.

நூன் மதிப்புரை

பாலமிழ்தம்

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தமிழ்த் தாய்க்கு என்னென்ன வகையான அணிகளை இயற்றும் என, எண்ணியறிதல் எளியதொன்றாக இல்லை. அக்கழகம், இதுபோது பாலமிழ்தம் என்பதோர் புதுவகைநூல் வெளியிட்டுளது. இது சங்க இலக்கியமாகிய நல்லாவிற்கறந்த தீம்பாலமிழ்தா? இக் காலத்து விரிந்த கலைகளாகிய பல் ஆக்களிற் கறந்து தொகுத்த பாலமிழ்தா? இவ்விரண்டுமா? வேறு பிற அமிழ்தங்களுமா? என்னின், பல்லமிழ்தங்களும் திரண்டெழுந்ததோர் நற்பாலமிழ் தமேயாகும். இந்நூல், கற்கும் மாணவர் திறத்துச் சுவைமிக்கது; பாலின் தொழிலிற்புக்க மக்கட்குப் பயன் மிக்கது. இஃது அவ் விருவகையோர் ஒவ்வொருவர் கையிலும் இருக்கத்தக்கது.

இதன் முற்பகுதியை ஆக்கியோர், தமிழ்ப் பேரறிஞர் திரு. இளவழகனார். பிற்பகுதியை ஆக்கியோர் பாற்கலை வல்லுநர் திரு. எஸ். எஸ். தேவர் அவர்கள்.

திருக்குறளின் முச்சீர், நாற்சீர் மணிகள்

தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளின் ஏர் மிகு சீர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மணிகளேயாகும். அவை சிலவும் பலவும் இணைந்து அரியபொருளினைத்தந்து இன்புறுத்துவன. மற்றும்,ஒரு சீரினைக்கண்ட அளவே, அதன் அரும்பொருட் பேரழகில் ஈடுபட்டு, அந்த அளவில் நின்று, என்னே! இச் செம் மணி என வியந்து மகிழும் இடங்கள் சில. 'கற்க' என்ற சீரினைக் காணுங்கால், இவ்வொருவிதியே! மணியே! மக்கட்கு அமையுமே! என வியந்து நிற்பேம்! இனி மேலே சென்று, 'கற்க கசடற' என்ற அளவில் நின்று, இவ்விரு சீர்களாய இருமணிகளின் ஒளி களைக் கண்டு வியந்து மகிழ்வேம்!. இனி இங்ஙனே 'கெட்டார்க்கு நட்டாரில்' என்றாற்போன்ற இருசீர் மணிகளைக்கண்டு மகிழ் வெள்ளத்தில் ஆழ்ந்திடும்இடங்கள் சில. இத்தகைய பேரழகுள்ள இடங்களுள், முச்சீர்மணி நாற்சீர்மணிகளாக உள்ளனவே பல. இவ்விடங்களையெல்லாம் நமது தெ. இ. நா. கழகம் திரட்டி, முச் சீர் மணிகள், நாற்சீர் மணிகள் எனச் சிறிய நறிய நூல்களாக்கி, அவற்றிற்கெல்லாம் தெள்ளியகருத்துரைகள்வெளியிட்டுள்ளது.

இத்தெள்ளிய மணிகளைத் தொகுத்தவர், அக்கழகத்தின் செயலாளர் என்னும் கழக உயிர் நிலையாளராகிய திருவாளர் வ. சுப்பையாபிள்ளையவர்கள் முச்சீர்மணிகளின் உரையாசிரியர். துடிசை கிழார் திரு. அ. சிதம்பர முதலியார் அவர்கள். நாற்சீர்மணிகளின் உரையாசிரியர், வித்துவான் திரு.மு. இராசக் கண்ணனார் அவர்கள் B. O. L.

பேரூர் பங்குனி உத்திர மலர்

தமிழ்ப்பேரறிஞர், திரு. சி. கு. நாராணசாமி முதலியார் அவர்கள், தாய்மொழிக்கும்,சமயத்திற்கும்செய்துவரும்தொண்டு வளர்பிறையென நாளுக்குநாள் வளர்ந்துவருதல் கண்டுமகிழ்ந்து வருகின்றோமன்றோ?. இதுபோது மேற்காணும் புதுமலர் ஒன் றினைத் தமிழுலகினுக்கு அளித்துள்ளார்கள். இதன்கண் அவர்களும், தமிழ்நாட்டின் ஒளிமணிகளாகிய திருவாளர்கள், துடிசைகிழார், செங்கல்வராயபிள்ளை யவர்கள், M. A., சி. கே. சுப்பிரமணியமுதலியார் அவர்கள் B. A., ஜே. எம். சோம சுந்தரம் பிள்ளை அவர்கள், B. A., B. L. 'குகஸ்ரீ' கிருபானந்த வாரியவர்கள், கந்தசாமி சுவாமிகள், R. N. கல்யாண சுந்தரக் கவுண்டர் அவர்கள் ஆய இன்னோரும் வரைந்தருளிய அரிய இனிய கட்டுரைகளையும், கண்ணிற்கு இனிய காட்சிகளையும்

உள்ளத்திற்கு இனிய உருக்கத்தினையும் தரும் அழகிய படங்கள் பலவற்றையும், இன்னும் பலவகையிற்பயன்தரும் 'பஞ்சாங்கம்' முதலிய காலக் குறிப்புக்களையும் கொண்டு இம்மலர் வெளி வந்துள்ளது. இதன் காட்சியும் மாட்சியும் அளவிலாச் சிறப்பின. இதன்கண் குறையொன்றுளதெனக் கூறவேண்டின், இதன்விலை மிக்ககுறைவானதெனும் ஒன்றே கூறல் கூடும். இதனை அச்சிற்பதித்து அதன் வழியாக மக்கள் உள்ளத்தே எளிதிற்பதிக்கும் பேரறத்தில் நம் முதலியாரவர்களுடன் பங்கு கொண்டவர், திரு. S. C. பொன்னுச்சாமி ரெட்டியாரவர்கள். இன்னோரெல்லாம் இனிது நெடிது வாழியர்.

மங்கையர்க்கரசியார் பிள்ளைத் தமிழ்

நமது தாய்மொழியில், பண்டுபோல் இக்காலத்தும், பிள்ளைத் தமிழ், உலா, அந்தாதி, கலம்பகம் முதலாய நறு நூலமிழ்தங்களாகிய சிறு நூல் வகைகளை நமது செந்தமிழ்க் கவிஞர்கள் இயற்ற முன் வந்திருப்பது, தமிழரின் நற்பேறுகளுள் ஒன்று என்னலாம். ஏதோ பள்ளிப்பாடங்களையேஎழுதிப் பொருள் ஈட்டும்நெறியில் மனம் செல்லத்தக்க இக்காலத்தே, தமிழ்மொழியிடத்தும் அருள்மிகு சமய குரவர்கள்பாலும், தெய்வங்களிடத்தும் உள்ள சிறந்த பற்றுக்கொண்டு எழும் இத்தகைய அரிய நூல்களைத் தமிழுலகம் மனமார வாயாரப்போற்றி வாழ்த்துங் கடமையினது. இந்நூலின் சொன்னலம் பொருணலங்களின் மாண்பினை ஒருவாறு சுருக்கிக்கூறுவதாயின், பண்டிதர், திரு. சி. எஸ். சொக்கலிங்கம்பிள்ளையவர்கள், இதற்கு முன்னுரையாக எழுதியுள்ள பொன்னுரையினைப் படிமொழிதலாக எடுத்துக் கூறுதல் வேண்டும். அத்துணைக்கு நம்பொழில் இடம்தர இயலாமைக்கு வருந்துகின்றோம். இவ்வரிய இனிய நூலையியற்றிய வித்துவான், கோவை, கு. நடேசக் கவுண்டர், B. O. L., அவர்களை வாயார வாழ்த்தி, இன்னனைய நூல்களை இயற்றிவர வேண்டுகின்றேம்.

பேராசிரியர் உரையாக்கம்

திரு. பண்டிதர், க. வேந்தனர் அவர்கள்,
பரமேசுவராப் பண்டிதர் ஆராய்ச்சிக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

முற்றெருடர்ச்சி-துணர் ௧௮, மலர் ௧௨, பக்கம் 427

முதற்கண் ஆசிரியர் தொல்காப்பியனர் உவமை, வினை, பயன், மெய், உரு வென்ற நான்கு கூறுபடவருமென்பதைக் கூறிப் பின் அந்நான்கும் ஒருபொருளோடொருபொருளை உவமஞ் செய்யும் வழி, ஒன்றேயன்றி இரண்டும் மூன்றும் விரவியும் வருமென, எய்தியது இகந்து படாமற்காத்து, அதன்பின் உவமை யெனப்பட்டது உயர்ந்த பொருளாக வேண்டுமென, எய்தாத தெய்துவித்து, அதன் மேலும் அவ்வுவமை, சிறப்பு, வலி, நலன் காதல்—என்ற நான்கு நிலைக் களங்களினும் பிறக்குமென, எய்தாததெய்துவித்துப், பின், அந்நிலைக்களங்கள், 'கிழ்ப் படுக்கப் படும் பொருளுடன்' ஐந்துமாகுமெனப் புறநடை தந்தமைத்துப், பின், மேற்கூறிய உவமை, முதல் சினைபற்றி வருங்கால், இன்ன வாறு ஆம் என்பதை விளக்கிப் போகின்றார்.

இவற்றை

(1) வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே
வகைபெற வந்த வுவமத் தோற்றம்.

(2) விரவியும் வரூஉ மரபின வென்ப.

(3) உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை.

(4) சிறப்பே நலனே காதல் வலியோ
டந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப.

(5) கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்.

(6) முதலுஞ் சினையுமென் றுயிரு பொருட்கும்
நுதலிய மரபி னுரியவை யுரிய என முறையே

வரும் இந்நூற்பாக்களானுணர்க.

இந்த ஆறு நூற்பாக்களினும் முறையே உவமை இனைத் தென்றலும், உவமை கூறும் வகையும், அவ்வுவமை பிறக்கும் நிலைக்களங்களும், முதல் சினைபற்றி உவமை கூறும் வகையும், உவமை இனைத்தெனவுணர்வான் புக்கமாணுக்கண் உளத்து ஒரு சிறிதும் மலைவு செறியாவகை மிகமிக நுணுகி ஒவ்வொரு

நூற்பாவினும் பொருள் கொள்ளுமாறு அருளிப் போந்தா ரென்க. ஒவ்வொரு நூற்பாவின் பொருளினையும், அவை யொன்றினை யொன்றின்றியமையாது நிற்கும் வைப்புமுறை யினையும், பேராசிரியர் உரையாலுணர்ந்துகொள்க.

மற்று, இவ்வாறு நூற்பாக்களினும் உவமையின் இயல்புகளை நனி விளக்கிப் போந்த ஆசிரியர், அவற்றுட் பொதிந்த பொருட் புணர்ப்புக்களில் மாணுக்கனுக்கு மலைவு தோன்றுவண்ணம், சில எய்தாததெய்துவித்து விளக்குவான், இருநூற்பாக்கள் யாத் துள்ளார். அந்நூற்பாக்களை நிரலே பேராசிரியர் உரையுடன் தந்து விளக்குதும்.

முதற்கண், ஆசிரியர் உவமைக்கும் பொருட்கும் பொது வாகிய வினை, பயன், மெய், உரு என்ற ஒப்புமைக் குணம் நான்கினையும், சிறந்தெடுத்துக் கிளந்து, இவைபற்றி உவமம் பிறக்குமென்ருர். இங்ஙனம் கூறினும், உவமை கூறுகின்றவன் உவமைக்கும் பொருட்குமுள்ள பொதுத்தன்மையை விதந்து சொல்லி உரையாத வழி, மாணுக்கன் இஃது என்னுங்கொல் பொருள் புலப்படுமாறு என மயங்குவானன்ருே ; அங்ஙனம் மயங்காது அப் பொருளை அறியுமாறு இனைத்தென விளக்கு வான் வேறு ஒரு நூற்பா யாத்தல் இன்றியமையாததாயிற்று. அங்ஙனமே, வருகின்ற நூற்பா யாத்தா ரென்பது. எனவே. இந்நூற்பாவினுல், 'வினை பயன்' என்று தொடங்கும் உவமை யியல் முதல் நூற்பாவிற்கே எய்தாததெய்துவிக்கின்ருரென்க. என்னை ?

"சுட்டிக் கூறு வுவம மாயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே"

என்பது நூற்பா. இதற்கு பேராசிரியர் உரை.—" இஃது எய் தாதது எய்துவித்தது.

இதன் பொருள் :—உவமத்திற்கும் பொருட்கும் பொது வாகிய ஒப்புமைக் குணம் நான்கினையும் விதந்து சொல்லி உரை யாதவழி அவ்விரண்டனையும் எதிர்பெய்து கூட்டி, ஆண்டுப் பொருந்திய தொன்று பொருந்தியது பற்றி, வினை பயன் மெய் உரு என்னும் நான்கனுள் இன்னதென்று சொல்லப்படும் என்றவாறு.

பவளம் போற் செந்துவர் வாய் என்பது சுட்டிக்கூறிய உவமம். என்னை ? இரண்டிற்கும் பொதுவாகிய செம்மைக் குணத்தினைச் சொல்லியே உவமம் சொல்லினமையின். அது

பவளவாய் என்கின்ற வழிச் சுட்டிக்கூறு உவமமாம். ஆண்டுப் பவளத்தினையும் வாயினையும் கூட்டிப் பார்த்துச் செம்மைக் குணம் பற்றி உவமஞ் செய்ததென்று அறியப்படும்; அல்லாக்கால், வல்லென்ற கல்லிற்கும் மெல்லென்ற இதழிற்கும் உள்ள தோர் ஒப்புமை ஆண்டில்லை என்பது, பிறவுமன்ன" என வரும்.

இந்நூற்பாவின் கருத்தினை நுணுகியாயின், யான் முற் கூறியாங்கு "வினைபயன்" என்ற முதல் நூற்பாவின் பொரு ளிற்கே இந்நூற்பாவினால் எய்தாதது எய்துவித்தாரென்பது நன்கு புலனாதல் காண்க.

மற்றிங்ஙனம் மாணுக்கனுக்கு விளக்குதல் வேண்டி முதல் நூற்பாப் பற்றி எழுமோர் ஐயத்தை, அந்நூற்பாவின் மேல் எய்தாதது எய்துவித்துப் போக்கிய ஆசிரியர், அங்ஙனமே உவமையியல் மூன்றும் நூற்பாவின் பொருள்பற்றியும் மாணுக் கனுக்கு வருவதோர் ஐயமகற்றி விளக்குவான் புகுந்து வரு கின்ற நூற்பா யாத்துள்ளார். என்னை?

"உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" என்பதே அந் நூற்பா. இதன் கண் உவமேயப் பொருளினும் உவமைப் பொருள் உயர்ந்ததாக இருக்கவேண்டுமென ஆணைதந்தாரென்க. இவ்வாணையான் மாணுக்கன் உவமையென்பது ஒருபுடை ஒப்புமையாதலின், ஒரு பொருட்பண்பினை உவமிக்குங்கால், அப் பொருளினும் உயர்ந்த பண்பு எப்பொருளின்கட் கிடப்பினும். அதனை எடுத் தொப்புமை கூறுவானன்றோ; அங்ஙனம் கூறு கின்றுழி, அது சிறந்ததென்று உலகத்தார் ஏற்றுக்கொள்ளா விடின், அவ்வுவமை கொள்ளப்படாதென்க. ஈண்டு உலகத்தா ரென்றது உயர்ந்தோரை. இவ்வகை மாணுக்கன் தான் விளக்க எடுத்துக்கொண்ட பொருளின்கட் கிடக்கும் பண்பினும் சிறந்தபண்பு எப்பொருளின்கட் கிடப்பினும் எடுத்து உவமை கூறுவனாதலின், அங்ஙனம் உவமை கூறுகின்றுழி, அவ்வுவமையும் பொருளும் சிறந்ததேயென உலகத்தார் மகிழ்ச்சி செய்யவேண்டு மென்று ஓர் ஆணைதரல் இன்றியமையாதாயிற்று. அதனை ஒரு நூற்பாவினால் எய்தாதது எய்துவித்து அமைக்கின்றாரென்பது. என்னை?

"உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" என்பதே —அந் நூற்பா. இதற்குப் பேராசிரியர் உரை.

இதுவுமது (எய்தாத தெய்துவித்தது). இதன் பொருள்:— உவமானமும் பொருளும் தம்மின் ஒத்தன வென்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும் என்றவாறு. "மயிற்றோகை போலுங் கூந்தல்" என்பதன்றிக் "காக்கைச் சிறகன்ன கருமயிர்" என்று சொல்லின் அஃதொத்த தெனப்படா என்றவாறு. "புலிபோலப் பாய்ந்தான்" என்பதன்றிப் பிழையாமற் பாயுமென்பதே பற்றிப் "பூசை போலப் பாய்ந்தான்" எனின், அதுவும் ஒப்பென்று கொள்ளாது உலகம் என்றவாறு. ஈண்டு ஒத்ததென்பதனை "ஒத்ததறிவான்" (குறள் 214) என்பது போலக் கொள்க" என்பது. இந் நூற்பாவின் கருத்தினை நோக்குவார்க்கு, யான் முற்கூறிய கருத்தே நன்கு புலனாகும். என்னை? கூந்தலுக்கு உவமை கூறுங்கால் பெருவரவிற்றாய் அதன் பண்பாகிய கருமையினையே சிறந்தெடுத்துக் கிளத்தல் மரபு. மற்று இங்ஙனம் கருமைப் பண்பினையே சிறந்தெடுத்துக் கிளப்பினும் அக்கூந்தலில் ஏனைய பண்புகளாய மென்மை, நீளம் முதலியனவும் கொள்ளப்படும் என்பது. இது. "சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்" என்பதனால், கூந்தலுக்கே சிறந்த பண்பாகிய கருமையைக் கூறவே ஏனைய பண்புகளை உய்த்துணர்ந்து அமைத்துக் கொளல் மரபெனக்க. கருமைப் பண்பிலாது ஏனைய நீளம் மென்மை முதலிய பண்புகளெல்லாம் அமைந்து கிடப்பினும், அக்கூந்தலைச்சிறத்தெடுத்துக்கிளவாரென்க. இங்ஙனே கருமைப் பண்புமட்டும் கிடந்து ஏனைய மென்மை நீளம் என்னும் பண்புகள் அமைந்துகிடவாதொழியின் அக்கூந்தலையும் சிறந்தெடுத்துக் கிளந்து உவமம் கூறுரென்பது நன்கறியக் கிடக்கின்றது. எனவே ஈண்டு இந்நூற்பாவின் கண் பேராசிரியர் எடுத்துக்காட்டியாங்கு "மயிற்றோகை போலும் கூந்தல்" எனக் கூறுது "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" என்பதனால் கூந்தலுக்குச் சிறந்த பண்பாகிய கருமை மயிற்றோகையினும் பார்க்கக் காக்கைச் சிறகின்கண் மிக்குத் தோன்றுதல் கண்டு, "காக்கைச் சிறகன்ன கருமயிர்" எனவுவமங் கூறின், உலகத்தார் உவமானமும் பொருளும் தம்மின் ஒத்தனவென்று மகிழ்ச்சி செய்யாரென்க. ஏனெனில் கூந்தலுக்குச் சிறப்பாகவுடைய கருமைப் பண்பு காக்கைச் சிறகின்கண் மிக்குத் தோன்றினும் ஏனைய பண்புகளாகிய மென்மை நீளம் முதலியன இன்மையானென்பது. மற்று இக் கருத்தினைக் கீழ்வரும் எடுத்துக் காட்டில் பேராசிரியர் நன்கு விளக்கிப் போகின்றார்.

தொடர்ச்சி 17-ஆம் பக்கம் காண்க.

குறிஞ்சிப் பாட்டு

(திரு. A. S. நாராயணசாமி நாயுடு அவர்கள், B. O. L.;
தலைமையாசிரியர், தமிழ்க் கல்லூரி, திருப்பதி).

(முற்றொடர்ச்சி: துணர் ௰௮, மலர் ௰௨, பக்கம் 420)

III

ஓப்பிச் சென்ற விலங்குகளின் பின் தன் நாய்களொடு சென்ற தலைவன், தலைவியையும் தோழியையும், தன் நாய்கட் கஞ்சி நடுங்கியெழுந்து அடிதளர்ந்து செல்லுழிக் காண்கிறான். அந் நாய்களை விரட்டிப் புதியரான அப்பெண்டிர்முன் பெரு மிதத்தோடு தோன்றுகிறான். மெல்லிய இனிய மொழிகளைக் கூறுகிறான். தான் தேடிவந்த விலங்குகளைக் கண்டதுண்டோ என வினவிச், சொல்லாடாமை கண்டு, சிலைபிளந்து, நாய் களின் குரலையவித்துச், சொல்லுமமையத்தை ஆவலோடெதிர் பார்த்து நிற்கிறான்.

அப்பொழுது, சொல்லவும் நாணிநின்ற தலைவியையுந் தோழி யையும், புனங்காவலரால் அலைப்புண்டு சினத்தொடு வந்த யானை யொன்று, அவர் தம் நாணினை மறந்து அவனையடைந்து நிற்கச் செய்கின்றது.

விலங்குதேடிவந்த இடத்தில் இவரை அவன் காண்டலும், கண்டதும் அவன் உள்ளங்களிதுளும்பி இழந்த இன்பொருள் கண்டானைப் போல மகிழ்ந்து பெருமிதத்தொடு பக்கலிற் செல்லலும், சென்றவன் அவர் குறிப்பறிதற்கு நின்று 'மெல்லிய இனிய' வற்றைக் கூறலும், எவ்வாறியல்பாக உள்ளன என்று காணல், மகிழ் தருவது. 'மெல்லிய இனிய' வாக அவன் கூறியவை யாவை? தான் நாய்களொடு ஆண்டு வந்து அவர்தம் அமைதியொடிருந்த நிலைமையைக் குலைத்து அஞ்சச் செய்தமைக்குப் பொறை காட்டுமாறு கூறிய சொற்கள், அம் மெல்லிய இனிய வெனலை நாம் உணரவேண்டும். தான் பணிந்து பொறை வேண்டிக் கூறிய அவ்விரும்பத்தக்க சொற் கட்கும், அவர் மாறு கூறிலராயினும், அவர் அவற்றை விரும் பினரென்பதை அவன் உணர்கிறான். தன் போன்று தலைவியும் காதற் குறிப்பை உடையளெனக் குறிக்கின்றான். அவள் வாய் திறந்து ஒருசொல்லேனும் சொல்லலைக் கேட்கும் அவா மீதூர்கிறது. அதனால், நாய்கட்கஞ்சிய அவளும் அவள் பாங்கி யும் தான் தேடிவரும் விலங்குகளைக் கண்டிருப்பின், ஆங்கிருந்

திராரென்பதையும் அதனையே உணர்த்தும் அவர் முகக்குறிப் பினையுங் கண்டபின்னும், 'கெடுதியும் உடையேன்' எனக்கூறி அவர்தம்வாய் மலருமா என நிற்கிறான்; அவர் நகரராராயினமை யும், பெருமகிழ்வுற்றார் போலுள்ளாராதலையும் புதுநாணினையும் கண்டு குறிப்பறிந்த அவன், 'சொல்லலும் பழியோ' எனப் பணிமொழியால் தன் பெருங்குறையைத் தெரிவிக்கிறான்.

எதிர்பாராது மின்னொளியாய காதல் பாயப் பெற்ற உள்ளத்தையுடைய தலைவியும், அவள் உள்ளத்தை உணர்கின்ற தோழியும், அப்பொழுதும் சொல்லாது நிற்கின்றனர். அவன் குறிப்பைத் தானுணர்ந்தாளாயினும், தன்னுள் நிறைந்த—இன்ன தெனத் தோன்றாத—புதுக்களியால், தலைவி, யாது சொல்வது யாது செய்வதெனத் தோன்றாது நிற்கிறாள்.

தலைமகனுளமும் காதலாய மின்னொளியால் துளக்கப்பெற்ற மையால் உடல் நிலைபெறாது ஆட்டங் கொள்கிறது. எனவே நாய்களின் குரலொலிக்கு அருவருப்புற்று நின்றே அவள் சொல்லாளாயினள் என்று எண்ணுவான் போன்று, தன் உடலுக் காட்டந்தரும் இன்றியமையாமையனுய்த் தொங்கு கின்ற சினையினைப் பிளந்து ஓங்கி வீசிக்காட்டி நாய்களின் குரலையவித்து, இவள்முகம் நோக்கி 'இப்போது நீ சொல்வாய்' என்பான் போன்று நிற்கிறான். தோழியொருத்தி அருகிலிருப் பதையும் அவன் எண்ணுதல் இயல்பேயன்றே? தோழியும் மறையாக இவன் செயலையும் தலைவியினுளத்தையும் முறையே தன் கடைக்கண்ணாலும் உளத்தாலும் நோக்கி நிற்கிறாள்.

இவ்வோவியத்தை உளத்திற் பதியுங்கள். இந்நிலையினை யுணருங்கள். எவர் என் செய்வர் என்று எண்ணியறிய முயலுங்கள். எவரை எவர் கடுமொழி கூறுதலியலும்? தலைவி யாது கூறலொண்ணும்? தலைவன் மறுமொழி கேளாமற் போதல் தான் எவ்வாறியலும்? தோழி எவ்வாறு குறுக்கிடல் ஆவதாகும்? எந்நேரம் இவ்வாறு நிற்பர்? அவர்கள் இவ் வுலகிலில்லை. இன்பவுலகில் காலவரையறையும் வடிவுணர்ச்சி யும் இன்றி, உணர்ச்சியோடுணர்ச்சி மோத நிற்கின்றனர். தோழி தன்னை மறந்து இக்காட்சியில் இன்புற்று மயங்கி நிற்கிறாள். இந்நிற்றற்கண் இருவர் மனத்திலும் சிலவுணர்ச்சி கள் அவரறியாதே தோன்றி வளர்ந்து சுடர்கின்றன. அவற்றின் சுடர் 'இவள் என்னுயிர்' என்று தலைவனையும், 'இவன் என் னுயிர்' என்று தலைவியையும் காணச்செய்கின்றன.

காதல்போன்ற உளவுணர்ச்சிகளின் தன்மையையும் உளத்தின் ஆற்றலையும் உணரவல்லார்க்கு இவ்வுரைகளின்

உண்மை மலைவிளக்கென விளங்குவதாகும். உளத்தின் ஆற்றலும் உளத்தன்மைகளின் தூய்மையும் வளர்ச்சியுருதாரே இதனை ஐயுறல் இயல்வதாம். இலக்கிய நுகர்ச்சிபெறுந் தகையோர் உளத்தின் ஆற்றல் உறப்பெற்ருேராதலின் இதனை இவ்வாறு காணத்தவருர். காணின் இக்கபிலர் தம்புலமைத் திறத்தாற் புனைந்த இவ்வோவியத்தைக் கண்டு அதன்கண் உளமொன்றி அதற்கடியராகா தொழிதலும் இலராவர்.

இவ்வோவியத்தை ஆய்ந்தெடுத்த செந்தமிழ்ச் சொற்களால், சிறந்த நடையமைய அவர் சொல்லியவாறே தம் அறிவுக் கருவியாலும் மொழிப் பயிற்சிக் கருவியாலும் உணர வல்லோர், அச் சொல்லையும் நடையையும் இவ்வோவியத்தின் உயிரென்னும் பன்னிறக் கலவை யென்று உணராதிருத்தலும் இயலாது. புலவர் இதனினும் பேரின்பம் வேறியாண்டுங் காணூர். அதுகொண்டே புலவர் குழாத்தொடளவளாவி யின்பமுறுதலைவிட 'இனிதாயிற் காண்பாம் உம்ப ருறைவார் பதி' என்றும் 'பண்புடையாளர் தொடர்பு நவில்தொறும் நூனயம் போலும்' என்றும் உணர்ந்து கூறினர் புலமை நிறைந்த—பிறர் புலமையை யுணருங் கண்படைத்த—பெரியோர்.

இவ்வோவியத்திற் காணும் உருவங்களை ஒருவரை யொருவர் அணுகி உள்ளம் பிணைந்து நிற்கும் நிலையில் இப்போது காணுவீர்கள்.

கோவை நூல்களில், இந் நிற்கும் நிலையைக் குலைப்பதற்குக் கோவையாசிரியர் தலைவனைத் தலைவியின் குழலிற் படியும் வண்டினை யோச்சச் செய்வார். இங்கு இக்கபிலர் ஒரு யானையை வருவிக்கின்ருர். புனத்தைக் கெடுத்த சிறுமையைப் பொருமல் புனங்காவலர் அம்பெய்து வீளையிட்டுத் துரத்த அவற்ருற் சினமுற்ற யானையொன்று மரங்களை முறித்து அரிமான் போல விரைந்து இம்மூவரும் நின்றநிலை குறித்து வருகிறது. பிளிறுதலாலும் மரமுறிவாலும் யானையின் வரவினை யறிந்து தலைநிமிர்த் ததனை நோக்கிய மகளிரிருவரும் தம் நாணை மறந்து அவனைப் பொருந்தி நடுங்குகின்றனர். அவ்வரவினை யறிந்த தலைவனும் அம்பு தொடுத்து யானைமுகத்தழுத்துகிருன். அம்பாற் புண்பட்டுக் குருதிவடிந்து நுதலழிந்த யானை புறங்கொடுக்கிறது. அம்பெய்து புண்படுத்திய தலைவன் தன் செயலுக்கேற்றபரிசினைத்தான் உறலாவதறிந்து முகக்குறிப்புநோக்கி நிற்கிருன். அவரோ அச்சந் தணியாராய் இவன் புறத்தே ஒருவரையொருவர் கோத்த கை விடாராய்க் கால் நிற்றற்குந் தளர நடுங்கி நிற்கின்றனர். அந்நிலையில் தலைவன் தலைவியின் நுதலை

நீவி 'அஞ்சாதே நடுங்காதே நின் நலம் நுகர்வேன்' எனக் கூறித் தன்னுள்ளே சிறிது நேரம் எதனையோ எண்ணிப்பார்த்து நின்று பின்னர்த் தோழியின் முகநோக்கி நகைத்தனன். அஞ்சுதரு நிகழ்ச்சியாலுண்டான இந்நிலை மாறுதலால் நேர்ந்த உளவுரத்தாலும் அவர்க்குத்தான் அணியனான தன்மையாலும் நுததலைத்தடவத் தான்பெற்ற உரிமையாலும் தன்னையறியாமலே 'நின் நலம் நுகர்வேன்' எனக் கூறிய தலைவன் தான் அவ்வாறு கூறிவிட்டமையையே தன் மனத்துள் நீடு நினைந்தான். நினைந்த பின் அதனை யெண்ணியே தோழியை நோக்கி நகைத்தான்.

உளக் குறிப்பொத்த தலைவனும் தலைவியும் தம்மைக்கூட்டி வைக்கக் கருதித் திருவருளே எதிர்ப்படச் செய்ததுமன்றி எதிர்ப்பாட்டின்பின் நிகழ்ந்த மன இறுக்கத்தை நெகிழ்க்க யானையையும் ஆங்கே கொணர்ந்தது எனக்கொள்ளுவரென்றும் நாம் உன்னியுணரலாம். நம் காரியத்தைக் கைகூட்ட முயற்சியின்றி எதிர்ப்படுங்கருவிகளை வேறெவ்வாறு இன்றும் நாம் கருதுகிறோம்?

இப்போது அவர்தம் மணம் முடிவு செய்யப்பட்டுவிட்டது. மனம் இறுகிய நிலை தளர்ந்து புதிதாக அறிந்த அன்பால் நெக்குவிடுகிறது.

நாணும், இந்நிலையில் தகாத ஒழுக்கம் நேருமோ என்ற அச்சமும் உடனே அவளையடைகின்றன. பிரிய விரும்புகிறாள் தலைவி. தலைவன் விடானாகி அவளை முயங்குகிறான். அவளோ பிரிதலிற் கண்ணுடையளே யன்றி முயக்கத்திற் றுணைசெய்யும் கருத்திலளாகிறாள். தலைவன் உடனே அவள் உள்ளத்தை அறிகிறான். அவள் நினைத்ததை அவ்வாறே உடனே கூறுகிறான். என் வளமனைக் கண்ணே நெய்ம்மலியடிசிலின் உயர்ந்தோரும் சுற்றமும் விருந்தும் உண்டெஞ்சிய மிச்சிலை நின்னொடுண்டலும் சிறந்தது என்று கூறி, அச்சொல் வாய்மையே என்பதைக் காட்ட மலைக்கடவுளை வாழ்த்தி, இது பொய்யாவதாயின் யான் கெடுக என வஞ்சின முரைத்துத் தண்ணீர் குடித்துச் சூளுறவு செய்கிறான். களிறு தந்த இத்தலை நாட் கூட்டத்தைஅச்சோலைக் கண்ணே கழிக்கின்றனர். மாலை நேரம் வருதலைக் கண்டு தலைவன் தலைவியின் முன் கையைப் பற்றி நின்று 'நுமர்தர நாடறி நன்மணத்தைக் கொண்டாடுவோம், அதுகாறுமுள்ள சின்னாட்களிற் கலங்குதலொழி' என்று கூறி இவர்தம் ஊர்வாயிலிலுள்ள உண்ணுந்துறையளவும் உடன் வந்து அங்கேவிட்டுப் பிரிந்து சென்றான்.

அன்றுமுதல் ஒவ்வொரு நாளுந்தப்பாமல் இரவில் வருந் தன்மையுடையனென்றும் பலகாரணங்களால் அவளருகிலுறு மின்பத்தைப் பெறுனெனினும் வெறுனுயினன் என்றும் தோழி தன் தாய்க்குக் கூறுகிருள்,

இளமைக் களியாலே முறைகடந்து சென்ருன் அல்லன் என்றும் செல்வச் செருக்காலே தன் நிலையினின்றும் தவறிய வனன்றென்றும் தாம் பழகுதலாலறிந்த அவன் சிறப்புக்களை யும் தோழி தன் தாயொடு கூறுகிருள்.

இவ்வளவுங்கூறி இவற்ருல் தன் தாய் தம்மில் எவரும் தவறுடையரல்லர் என்பதனையும் தலைவன் தலைவியர் ஒழுக்கம் குறையுடையதன்றென்பதனையும் உணர்ந்திருப்பாளென்றறிந்த தோழி, தலைவி தலைவன் கங்குலில் வந்தும் அவனைக்காணலுருது கலங்கிச் செல்கின்ற நிலையெண்ணித் தன் மனத்தினை வரைந்து கொள்ளுதலே தகுதியென்று தேறச்செய்து கண்ணீர் சொரி வாள்; தலைவன் வரும் வழியின் ஊறுகளை எண்ணி, எண்ணு தொறுங் கலுழ்வாள் என்றுங் கூறி அறத்தொடு நிற்கிருள்.

கோடீச்சரம்

திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள், ஆசிரியர், திருவையாறு.

முன்னுரை :—சிவநெறிக் குரவர்கள் ஓதிய திருமுறைகளில், சிற்சில பதிகங்களுள், திருப்பதியின் பெயர் ஒன்ருகவும், அங் குள்ள திருக்கோயிலின் பெயர் மற்ருென்ருகவும் உள்ளன. அங்ஙனம் அமைந்துள்ள கோயில்களுள் **மணிக்கோயில்** என்று திருநாவுக்கரசுப் பெருந்தகையாரால் குறிப்பிடப் பெற்றுள்ளது யாண்டுள்ளது என்று இதுகாறும் சைவ உலகம் அறிந்திலது. அறிந்தவற்றுள்ளும் சிற்சிலவற்றிற்குக் காரணங்களும் புலப்பட வில்லை. அக்காரணங்களும் பிறவும் புலப்படின் அவை சைவ சமய வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என்று எண்ணி முதற் கண் **கோடீச்சரம்** என்னும் கோயிலைப் பற்றி, ஈண்டு எழுது கின்றேன்.

இருக்குமிடம் :—கோடீச்சரமென்பது கும்பகோணத்திற்கு மேற்கில், பூவேரி பொழியும் பொழில்கள் இருகரையிலும் சூழப் பெற்ற காவேரியின் வடகரைப் பக்கத்தில் **கொட்டையூர்** என்னும் பதியிலுள்ள திருக்கோயிலின் பெயராகும்.

பெயர்க் காரணம் :—மிகப் பழங்காலத்தே, **ஏரண்ட முனிவர்** என்பார், இக் கொட்டையூரிற் கோமானைக் குறிக்கொண்டு, பன்னெடுங் காலம் தவம் கிடப்ப, அதுகண்ட அண்ணல் அங்குத் தோன்றிக் காட்சியளித்து "விழைவு வினவுக" எனலும், அவ் வருந்தவர் "திருவடியைக் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே", 'போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி யின்பமும், ஏக நின் கழலிணை யலாது இலேன்', எம்பிரான்! ஒன்று வேண்டுவன், அதுவே எனது நெடுநாள் வேட்கை, இன்று அடியேனுக்கு அருளிய இக்கோலம் பல்லாயிரவடிவாய்க் காட்டியருளி, அவையனைத்தையும் அறிவான் அறிந்து மகிழும் பெற்றியும் ஆற்றலும் இச் சிற்றுயிர்க் கின்மையால் அவற்றை யும் அருளி உய்ய ஆட்கொண்டருள்க என வேண்டினராக, பெருமானும் அவ்வாறே, கோடிவிநாயகர், கோடி முருகர், கோடி அம்மையார், கோடி சண்டேசுரர்களோடு தாமும் கோடித் திரு வுருவம் கொண்டு காட்சி தந்தருளினர். அதனால் அவ்வூர் இறைவர்க்குக் **கோடீச்சரன்** என்ற திருப் பெயரும், திருக் கோவி லுக்குக் **கோடீச்சரம்** என்ற திருப் பெயரும் ஏற்பட்டன.

* இன்றும் சிவலிங்கப்பெருமான் திருவுருவம் பலாக்காய் போன்று முள் முள்ளாகத் திருமேனியெங்கும் உடைமை நேரிற் கண்டறியத்தகும். ஒவ்வொரு முள்ளும் ஒவ்வொரு சிவலிங்க மாகும். கோடி விநாயகர் திருமேனியிலும் பல விநாயகவடிவங் கள் காணப்படும்.

இலக்கணமும் பொருளும் :—வடமொழியில் 'ஸ' வுக்கும் 'ஷ' வுக்கும் வேறுபட்டு ஒலிப்பதோர் எழுத்துண்டு. அது வேறுவடிவினது. அதனையும், 'ஸ' வடிவாற் குறிப்பதே பெரு வழக்காகவுள்ளது. நம(ச்)சிவய, பசுபதி, ஈச்சுவரன் என்பவற் றில் உள்ள சகரம் அதுவே. இவ்வெழுத்துத் தமிழில் வருங்கால் இன்னபடி வரும் என்பதைப் பதவியிற் சூத்திரமொன்று பகரும். இவ்வெழுத் திடைப்படவரும் மொழிகள் தமிழில் இரட்டித்து வரும். நமச்சிவாஅய வாழ்க, மகேச்சுரன் என்பவற்றிற் காண்க. ஈ(ஸ்)வரன் ஐ(ஸ்)வரியம் என்பன ஈசுவரன், ஐசுவரியம் என இரட்டிக்காமல் வருதலும் உண்டு. ஈ(ஸ்)வரன் என்ற சொல் ஈசுவரன், ஈச்சுரன், ஈச்சரன் என விகற்பித்து வழங் கும். **தொல்காப்பியன்** செய்தது **தொல்காப்பியம்** ஆனுற்

---

*இச்செய்தியை அடியேனுக்கு அறிவுறுத்தியவர்கள் சைவப்பற்றுச் சான்ற, பண்டித, உயர்திரு. **அ. கந்தசாமிப்பிள்ளை** அவர்களாவர். அவர்களது நுண்ணறிவையும், உற்றுநோக்கும் ஆற்றலையும் (Observation Power) அடியேனது தமிழாசிரியப் பெருந்தகையார், உயர்திரு. **கரந்தைக் கவியரசு** அவர்கள் அடிக்கடி பாராட்டுவதுண்டு.

போல ஈச்சுரன், ஈச்சரன் உறைவது ஈச்சுரம், ஈச்சரம், என்றுகும்.

கோடி + ஈச்சரன்=கோடீச்சரன்—தீர்க்கசந்தி. கோடீச் சுரன், கோடீச்சரன் உறைவது கோடீச்சுரம், கோடீச்சரம் ஆகும். ஈச்சரம்=கோயில்.

பெருமை ;—இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஐந்து மூர்த்திகளையும் காண்போர், வேறு தலங்களில் கோடித் திரு வுருவங்கண்ட பலனடைவர். இங்குச் செய்த எப் புண்ணியமும் பிற தலங்களிற் செய்த புண்ணியங்களினும் கோடி மடங்கு பயன் தருமென்றும், இத்தலத்தில் செய்த பாவமும் அப்படியே கோடிமடங்காகிக் கழுவாயிலதாமென்றும் பெரியோர் கூறுவர்.

அப்பெருமான் இத்தலத்தையும் திருவலஞ்சுழியையும் சேர்த்துப் பாடியதன் காரணம் :—

*இத்தலமான்மிய வரலாறுகொண்டு திருவலஞ்சுழிக்கும், இத்தலத்துக்கும் இயைபு காணப்படும். அங்கும் இங்கும் **ஏரண்டமுனிவர்** திருவுருவம் உண்டு. அவ்வியைபுகொண்டே அடியேனை ஆளுடைய அரசு இவ்விருதலத்தையும் ஒவ்வொரு பாசுரத்துப்பாடி, இரண்டற்கும் ஒரேபதிகம் பாடியருளினமை உய்த்துணரத்தகும். இவ்வாறே தேவாரப் பதிகங்களில் இரு தலங்களைச் சேர்த்து ஒரேபதிகத்துக் கூறியருளிய காரணமும் உணரப்படும்.

கோயிலின் பழைமையும் அமைப்பும் :—இங்கு எழுந்தருளி யிருக்கும் சிவபெருமான் திருநாவுக்கரசுப் பெருந்தகையரால் பாடப்பெற்றுள்ளமையின் அவரது காலமாகிய கி. பி. ஏழாம் நூற்றுண்டிற்கு முன்னரே (அதாவது இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே) ஈண்டுள கோயில் பெருஞ் சிறப்புடன் விளங்கியிருத்தல் வேண்டும். இதன் அமைப்பை † நோக்கும் பொழுது, இது **முதலாம் மகேந்திரவர்மனுக்கு** முற் பட்ட ஒரு பல்லவ மன்னனுற் கற்றளியால் ஆக்கப் பெற்றிருக்க வேண்டு மென்று கொள்ள வேண்டியிருக்கின்றது. எனவே

---

*இவ்வரலாறு இரண்டாம் அத்தியாயத்தில் பிலம்புக்க காவிரியை வெளிக்கொணர்ந்தது என்ற தலைப்பின்கீழ் விரிவாகக் கொடுக்கப்பட் டுள்ளது.

† இதன் அமைப்பை, விமானத்திலுள்ள சுதைப்படிமங்களைக் கொண்டுதான் முடிவுசெய்ய வேண்டியிருக்கின்றது.

இக்கோயில் மிகப்பழைமை வாய்ந்தது என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை. திருக்கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி இருக்கின்றது. கீழ்மேல் மதில் நீளம் 310 அடி: தென்வடல் மதில் நீளம் 156 அடி: பரப்பு 48360 சதுரஅடி; இதற்கு முதற்கோபுர வாயிலாகிய **திருத்தோரணத் திருவாயில்,** இரண்டாம் கோபுரவாயிலாகிய **திருமாளிகைத் திருவாயில்,** அர்த்த மண்டபத்துத் திருவாயிலாகிய **திருவணுக்கன் திருவாயில்** என்னும் மூன்று வாயில்கள் இருக்கின்றன. முதற்கோபுரம் அறுபது அடி உயரத்துடனும் ஐந்து நிலைகளுடனும் திகழ்கின்றது. இரண்டாம் கோபுரம் நாற்பதே முக்கால் அடி உயரத்துடனும் மூன்று நிலைகளுடனும் கூடியது. எனவே தெய்வப்பாக் கிழாராகிய சேக்கிழார் பெருமானால் திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள மூன்று திருவாயில்களும் இக்கோயிலுக்கு அமைந்திருக்கும் பெருஞ்சிறப்புக் கண்டு மகிழ்தற்குரியதாகும்.

கோயிலில் இரண்டு திருச் சுற்றுலைகள் (பிராகாரங்கள்) இருக்கின்றன. முதல் திருச்சுற்றுலையின் நடுப்பகுதியில் **கோடீச்சரர்** எழுந்தருளியிருக்கும் கருப்ப இல்லும் (Central shrine); அர்த்தமண்டபமும், மகாமண்டபமும் இருக்கின்றன. இவற்றுள் முற்கூறியன இரண்டும் பல்லவமன்னனாற் கட்டப் பெற்றனவாகும். பின்னது பிற்காலத்துச் சோழமன்னர்களில் ஒருவரால் ஆக்கப்பெற்றிருத்தல் வேண்டும். மகாமண்டபத்தைச் சார்ந்த கீழ்ப்பகுதியில் கூத்தாடுந் தேவர் (நடராச மூர்த்தி) ஆளுடைய நாயகர் (சோமாஸ்கந்தர்), நால்வர், ஏரண்டமுனிவர் முதலானோர் எழுந்தருளியிருக்கும் மண்டபம் இருக்கின்றது. முதல் திருச்சுற்றுலையில் கோடிவிநாயகர், கோடி முருகர், கோடி சண்டேசுவரர் முதலானோர் எழுந்தருளியிருக்கும் சிறு, சிறு கோயில்கள் இருக்கின்றன. கோடித் தீர்த்தமும் இங்குத்தான் இருக்கின்றது.

இரண்டாம் திருச்சுற்றுலையில் வசந்தமண்டபம், அம்மன் கோட்டம், பள்ளியறை, யாகசாலை, மடைப்பள்ளி இவைகள் இருக்கின்றன.

திருக்கோயில் மிக்க நன்னிலையில் இருக்கின்றது. இதைப் போற்றி, புரந்துவரும் அன்பர்கள் இறையருளால் வேண்டும் நலனெலாம் பெற்று நீடு வாழ்வார்களாக.

கோடீச்சுரமேய குழகன் கழல் போற்றி
பந்தார் விரலம்மை பதமலரிணை போற்றி.

(எட்டாம்பக்கத்தின் தொடர்ச்சி)

என்னை ? "புலிபோலப் பாய்ந்தான்" என்பதிற் பிழையாமற் பாயு மென்பதே பற்றிப் பூசை போலப் பாய்ந்தான் எனின், அஃதும் ஒப்பென்று கொள்ளாது உலகம் என்றவாறு—என்பது.

ஈண்டுப் புலிபோலப் பாய்ந்தான் என வரும் உவமைக்கண். பாய்தற்றொழிலில் பூசையும் பிழையாது சிற்றுயிர்களின் மேற் குறிக் கொண்டு பாய்ந்து அகப்படுத்தியுண்டலைக் கண்டு வைத்த ஒருவன், பிறனொருவனின் பாய்ச்சலின் மிகுதிப்பாட்டினை இன்னொருவனுக்கறிவுறுத்துமிடத்து, உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை எனும் ஆணையான் அவன் பாய்ச்சலிற் பிழையான் என்பதை அறிவுறுத்தப் பாய்ச்சலிற் பிழையாத பண்பில் அவனினும் மிக்க பூசைப் பாய்ச்சலை உவமமாகக் கூறின், உலகத்தார் உவமையும் பொருளும் ஒத்தனவென்று மசிழ்ச்சி செய்யாரென்க; ஏனெனில், புலியின்கண்ணுள்ள, பிழையாமற் பாய்தலாகிய சிறந்த பண்பை எடுத்துக் கிளப்பினும் ஏனைய பண்புகளாகிய தறுகண்மை உருவப் பொலிவு முதலியன பொதிந்து கிடந்து இவன் மாட்டும் அஞ்சத்தக்கன கண்டவிடத்து அஞ்சாமையாகிய தறுகண்மையும். அத்தறுகண்மைக்கேற்ற உருவப் பொலிவும் பிறவும் உளவென்பதைப் பிறர்க் கறிவுறுத்தும் அருமைப்பாடு பெரிதும் பொதுளிக் கிடத்தலினாலும், பூசையின் மாட்டுப் பாய்தற் பண்பன்றி மற்றைப்பண்புகள் சிறந்து தோன்றாமையானும் என்பது. எனவே இதுகாறும் கூறியவாற்றான் "உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" என வரூஉம் நூற்பாவிற்கு பேராசிரியர் கூறும் உரையே ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தை நிலைபெறுத்தும் மாட்சி பெரிதுடைத்தா மென்பதூஉம், அப்பேராசிரியர் உரையினை மறுத்துக் கூறும் உரை, பெரிதும் ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தொடு முரணுறுவதா மென்பதூஉம், இங்ஙன் தொல்லாசிரியர் கருத்துணர்ந்துரைவிரித்த பேராசிரியர் உரையினை மறுத்துரைத்தல், ஆன்றோரானேற்கப் படாதொழிதலுடன், நூல்கற்பான்புகுந்த மாணக்கரையும் பெரிதும் மயங்கவைக்கும் பெற்றியதாமென்பதூஉம் தெரித்துப் பேராசிரியர் உரையினை ஆக்கமுறுத்தினேன்.

பேரறிஞர்கள் நடுநின்று, பேராசிரியர் உரையே சிறப்புடைத்தென யான் கூறியதன்மேல், தங்களுக் கெழுங்கருத்தினை அளவை நூற் கருத்துடன் முரணாத முறையினின்றாய்ந்து வெளிப்படுத்தித் தமிழுலகை மகிழ்விக்குமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

அரக்கர் தமிழரா ?

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில்' 6—4—43 செவ்வாய், மாலை, ஏழுமணிக்குக் கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவர், நாவலர், பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தலைமையில், சென்னைப் பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ் விரிவுரையாளர் திரு. சேதுப்பிள்ளை அவர்கள் ஆற்றிய விரிவுரையின் சுருக்கம்.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் உள்ளத்து உலவி, முதுபெருங்கவி, வெள்ளக்கால், சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வாயிலாக வெளிவந்த இராமாயண உள்ளுறை, என்ற நூலிற் கூறப்பட்டுள்ள "ஆரிய திராவிட போராட்டவரலாறே இராமாயணம்: அரக்கர் என்று பேசப்படுவோர் தமிழரே" என்ற செய்திகள் ஆய்தற்குரியன. பழந்தமிழரின் பண்புகள் உயர்ந்தன எனச் சங்கநூல்கள் நவில்கின்றன. அவ்வுண்மைக்கு முற்றிலும் மாறுபாடாய் இலங்கும் பண்புடையவன் இராவணன். "இரக்க மென்ற ஒரு பொருளிலா அரக்கர்" என்று, கம்பர் அரக்கர்களின் பண்பை விளக்கியுள்ளார். பல்லாயிரக் கணக்கான வீரர்கள் கால்வேறு, தலைவேறாய்க் குடல்சரிந்து, குருதி கொப்புளிக்கக் கிடந்த நிலையை மெல்லியற் சீதைக்குக் காட்டி அவ்வம்மையின் உளம் நலியச் செய்தது தமிழ்ப் பண்பன்று. சீதையை முதலிற் கண்ட அனுமன் அவளோடு வடமொழியிற் பேசின், 'வந்தவன் மாற்றுருக் கொண்ட இராவணன்' என்று அஞ்சுவள் ஆதலின் அவன் அறியாத திராவிடச் செம்மொழியில் பேசுதலே சாலும்' எனத் தெளிந்த அனுமன் கூற்றால் இராவணன் பேசியது தமிழ் அன்றெனத் தெளிவாகிறது. தேவாரம் புகழும் பெருமையுடை, யானுயினும், அவன் தன்வழிபடு கடவுள் உறையும் மலையை நந்தி எம்பெருமானின் தெருட்டுரைகளையும் கேளாது பெயர்க்க முயன்றனன் எனில், அவன் அன்புடைச் சைவன் அல்லாத

ஆணவ உருவினனாய் விளங்கியமை அறியக்கிடக்கின்றதன்றோ. நந்தியைக் குரங்கென பழித்ததால் உண்டான சாபவரலாறு, அனுமன் இலங்கையை அழித்தது கண்டு இராவணன் வெகுண்டஞான்று விபீடணன் உரைத்த மொழிகளால் விளங்குகிறது. இராவணன் கைலைக் குன்றினை எடுத்தபொழுது சிவபெருமான் தன் சேவடிக்கொழுந்தால் அழுத்த அவன் மனம் உளைந்து, தப்புதற்காக அவன் இசைத்தது பன்னரும் சாமகீதம் எனச் சீதையின் வாய்மொழியால் தெளிகின்றோம். வண்டிசைப் பதும், தமிழ்ப்பாட்டெனக் கொள்ளும் நாம், வடமொழி இசையுடையானைத் தமிழனெனக் கொள்ளல் தகவன்று. சூர்ப்பனகை தன்னை இராமனிடம் "பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி முப் புரங்கள் செற்ற—சேவலோன் றுணைவ னான செங்கையோன் றங்கை திக்கின்—மாவெலாம் தொலைத்து வெள்ளி மலை எடுத் துலக மூன்றும், காவலோன் பின்னை காம வல்லியாங் கன்னி யென்றாள்" எனத் தம்முன்னோர் வழிமுறையையும் தன் உடன்பிறந்தோர் பெருமையையும் அறிவித்தலின், அவளும் இராவணன் முதலியோரும் ஆரியர்குலம் என்பது அறியக் கிடக்கின்றது.

கும்பகர்ணன் போர்க்களம் செல்லுங்காலை "அற்றதால் முகத்தினில் விழித்தல் **ஆரிய**, பெற்றனன் விடை" எனப் பேசுகின்றனன். களத்தில், கும்பகர்ணன் தன் பின்னவனோடு உரையாடுங்காலை "குலத்தியல் பழிந்த தேனும் குமரமற் றுன்னைக் கொன்டே, புலத்தியன் மரபு மாயாப் புண்ணியம் பொருந்திற் றென்ன—வலத்தியல் தோளை நோக்கி மகிழ்கின்றேன் மன்ன—எனத் தன் குலம் யாதென விளங்கப் பேசுகின்றான், இராவணனைக் கொன்ற பழி (**பிரமகத்திதோடம்**) நீங்க, இராமன் சிவவழிபாடாற்றியுளன். ஆதலின் அவன் தமிழ்க்குலத்தவன் அல்லன், ஆரியனே, கம்பர் இராமரை "வடசொற் கடந்தான் தென்சொற்கு எல்லைதேர்ந்தான்" எனக் கூறலின் அவரைத் திராவிடர் எனக்கொள்ளினும் இழுக்காகாது.

தலைவர் முடிவுரையின் சுருக்கம்.

அரக்கர்களை ஆரியர் என்று சொல்லுதற்கு இல்லை. வடமொழி நூற்களில் அநாரியர் என்றே பேசப்படுகின்றனர். இராவணன் சீதையிடம் உரைத்தனவெலாம் அவளைத் தன் வயப்படுத்தற்கான தற்பெருமை உரைகளே. தொல்காப்பியம். வரையறுத்த தமிழ் எல்லைக் கப்பாற்பட்ட நாட்டிலே இராவணன் வாழ்ந்தனன். வால்மீகி முனிவர் தமிழகத்தை இலங்கையினின்றும் வேறு பிரித்தே கூறியுள்ளார். சோதிட நூலாரும் தேவகணம்—மனிதகணம், இராக்கதகணம், என மூன்ருகவே கூறுகின்றனர். ஆதலின் அரக்கர்கள் ஆரியரும் அல்லர், தமிழரும் அல்லர். தனி இனமெனக் கொள்ளலே சாலும். "இரக்கமென்ற ஒரு பொருளிலா அரக்கர்" "அறம்புகா இலங்கை" என்றது கவியின் உயர்வு நவிற்சிக் கூற்றேயாம். இராவணுதியர் மூவரில் பின்னவர் இருவரும், ஒருசடை உய்ய நின்ற திரிசடையும் சிறந்தவர்களாகவே காட்டப்படுகின்றனர். புறப்பாட்டு, சிலப்பதிகாரம் முதலிய பழைய நூல்களிற் பேசப்படும் மனு சிபி முதலிய வேந்தர்களும், வடமொழி நூற்களில் இராமனின் முன்னோர் வழிமுறையிற் காட்டப்படுகின்றனர். சோழர்களும் தசரதன் குடியினரும் சூரியகுலத்தவரென்றே வழங்கப்படுகின்றனர். ஆதலின் இருகுடியினரும் ஒரு கால்வழி வந்தவர் போலத் தோன்றுகின்றனர்.

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் இதுகாலை விளைக்கும் தீச்செயல் தடுக்கற்பாலது எனக் கூறிச் சொற்பொழிவை நிறைவித்தனர். பின், கரந்தைக் கவியரசர், தலைவர் அவர்கட்கும் சொற்பொழிவாளர் அவர்கட்கும் குழுமியிருந்த அன்பர்கட்கும் சங்கச் சார்பாக நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

மாறன் வழுதி மணவா மருண்மாலைச்
சிறியோர் வாடை சினந்து.''
(முத்தொள்ளாயிரம். 95. புறத். 1560.)

'வளையவாய் நீண்டதோள் வாட்கணுய் அன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோ—தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேன் **மாறனைக்**
கண்கொண்டு நோக்கலென் பாள்.''
(முத்தொள்ளாயிரம். 77. புறத். 1542.)

இன்னும்,

'' வழுவிலெம் வீதியுள் **மாறன்** வருங்காற்
றெழுதேனைத் தோணலமுங் கொண்டான்—இமிழ்திரைக்
கார்க்கடற் **கொற்கையார்** காவலனுந் தானேயால்
யார்க்கிடுகோ பூச லினி.''
(முத்தொள்ளாயிரம். 54. புறத். 1519.)

எனவரும் காமப்பாடாண் வெண்பாவில், '' கொற்கை '' என் றூரும், '' மாறன் '' என் றுயர்குடிப்பிறப்பாந் தோற்றமும் ஒருங்குவருதலும் காண்க.

சூத்திரம் :—31

'' மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே.''

கருத்து :— இது, புரைதீர்காமப் பாடாண்பகுதியிற் றலைமக்கள்பெயருங்கூறப்பெறு மரபுண்மை சுட்டுகிறது.

பொருள் :—மெய்ப்பெயர் = தலைமக்களின் உண்மைப் பெயரை ; மருங்கில் வழியே வைத்தனர்=பாடாண் பகுதியில் நெறியாக அமைத்துக்கூறினர் புறநூற்புலவர்.

குறிப்பு :—மருங்கு = பக்கம் ; இங் கது பாடாண்பக்கம் குறிக்கும். அகத்திணைக்கு விலக்கப்பட்ட இயற்பெயர் காதற் பாடாண்புறத்திணையில் வருதல் புலனெறியாதலின், ' வழியே

வைத்தனர்' என விளக்கப்பட்டது. ஈற்றேகாரம் அசை, "புறநாற் புலவர்" எனு மெழுவாய் அவாய்நிலையாற் கொள்ளப்பட்டது.

மெய்ப்பெயர் குறித்த பாடாண்பாட்டு :—

"நெடுவரைச் சந்தன் நெஞ்சங் குளிர்ப்பப்
படுமடும் பாம்பேர் மருங்குல்—இடுகொடி
ஓடிய மார்ப னுயர்நல் லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும்."

(சிறுபாணுரையீற்றுப் பழைய பாட்டு.)

சூத்திரம் :—32

"கொடிநிலை காந்தள் வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே."

கருத்து :—இது, திணைகள் மக்கள் ஒழுக்கங்குறித்தே வருமாயினும், பாடாண்வகையில் ஒருசில தலைமக்கள் பாராட்டுடன் கடவுட்பராவலும் தழுவிவரு மரபு கூறுகிறது.

பொருள் :—கொடிநிலை, காந்தள், வள்ளி என்ற=கொடிநிலை காந்தள் வள்ளி என்னும் பெயருடைய; வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்=போர்த்தொடக்கமாம் வசையற்ற வெட்சியின் "மறங்கடைக்கூட்டிய" சிறப்பு வகை மூன்றை முதலாகக்கொண்டுவரும் பாடாண்பகுதி மூன்றும்; கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும்=கடவுட் பரவுதலுடன் பொருந்தி வரும்.

குறிப்பு :—ஈற்றேகாரம் அசை.

பொதுவாகப் பாராட்டு நுதலும் பாடாணின் சிறப்புவகை மூன்று, கடவுள் வாழ்த்தைத் தழுவிவருதல் குறிக்கக் கடவுள் வாழ்த்துக்கு "ஓடு"க் கொடுத்துரைக்கப்பட்டது.

போரைத்தொடங்குந் திணை வெட்சி; அதன் பொதுவகை ஆகோள்; சிறப்புவகைகளுட் பாடாணுய்க் கடவுள்வாழ்த்துக்

கண்ணுவன இதிற் குறித்த மூன்றுமேயாதலின். முற்றும்மை கூட்டப்பட்டது. இதிற் குறித்த மூன்றும் தம்மளவில் வெட்சி வகைகள். அவற்றை முதலாகக் கொண்டுவரும் பாடாண்பகுதி மூன்றே கடவுள்வாழ்த்தொடு வருமெனற்கு, "முதலன மூன்றும்" என்று கூறப்பட்டது. "அகரமுதல எழுத்தெல்லாம்" என்றது போல கடவுள் கண்ணிய பாடாண்வகை இதிற் குறித்த "மூன்று முதலன" எனக்கொள்க. "முதலன" ஈண்டுக் குறிப்பு வினை; "முதலாகவுடையன," என விரியும்.

இனிக் கொடிநிலை முதலிய மூன்றையும் "முதலன" என்றது, அவை "அமர்கொள் மரபுத் திணை ஏழில் முதலாய வெட்சியில் போர்த்தொடக்க முதலில் நடைபெறுவனவாதலின், என்பாருமுளர்.

வெட்சிவகையாய் இதிற் குறித்த 'கொடிநிலை' முதலிய மூன்றும், அடுத்த சூத்திரம் கூறும் வஞ்சிவகைக் 'கொற்ற வள்ளை' ஒன்றும், இங்கு முறையே அவ்வத்திணையடியாய்ப் பிறக்கும் பாடாண்வகையையே குறிக்கும் என்பதை இளம் பூரணர் நச்சினார்க்கினிய ரிருவரும் கூறுகின்றனர். ஆனால், இதன் முதலடியில், "கொடிநிலை கந்தழி வள்ளி" என்றிரு வரும் பாடம் கொண்டு, கந்தழிக்கு வெவ்வேறு பொருள்கூறுவர். "கந்தழி" என்றொன்றை எத்திணைக்கும் துறையாகத் தொல் காப்பியர் கூறிலர்; யாண்டு மதை அவர் விளக்கவுமில்லை. பழைய சான்றோர் செய்யுட்களிலும் இப்பெயருடைய புறத் துறை எதுவும் பயிலாமையானும், இனைத்தென விளக்கா ததனையும் வாளா பெயரளவில் சுட்டி மயங்கவைப்பது தொல் காப்பிய ரியல்பன்றாதலானும், இதில் "கந்தழி" என்ற பாடம் பொருந்தாமை வெளிப்படை. அன்றியும், இதில் கடவுள் கண்ணிய பாடாணும் முடியுமெனக் குறித்த மூன்றும் 'மறனுடை மரபிற்' போர்தொடங்கும் புறவொழுக்காம் ஒரேதன்மைய வென விளங்க "முதலன மூன்றும்" என் றொருநிரலிற் சுட்டப் படுதலானும், அவற்றுள் கொடிநிலையும் வள்ளியும் போர்த் தொடக்கத்தில் நிகழும் வெட்சிவகைகளாய் முன் விளக்கப் பட்டனவாதலானும், அவற்றுடன் பொருந்த ஒருங்கு சுட்டப்

படும் மற்றொன்று மவைபோலவே (இங்கு விளக்காமல்) முன் விளக்கப்பட்ட 'போர்த்தொடக்க வெட்சிவகையாதல்' வேண்டு மாதலானும், இவ்வியலில் முன் வெட்சித்துறைகளுள் முதலில் முருகக்கடவுள்வாழ்த்துடன் போர் தொடங்குவதாய் விளக்கப் பட்டது "காந்தளா"தலானும், அதை யிங்குச் சுட்டாது விட்டுக் கடவுள்வாழ்த்தொடு வரும் வெட்சிப் பாடாண்வகை 'முதலன மூன்றும்' என முற்றும்மை கொடுத்து முடித்தது குன்றக்கூறலெனும் குற்றமாமாதலானும்,கடவுள் வாழ்த்தொடு பாடாணுய் முடியும் வெட்சியல்லாப் பிறவஞ்சி வகையை இதன் பின் வேறு சூத்திரத்திற் கூறுதலா லிங்குச் சுட்டிய மூன்றும் வெட்சிவகையாதலே முறையாதலானும், அத்தகைய வெட்சி வகை காந்தள் என்றன்றிக் கந்தழியென முன் சுட்டப்பெருமை யானும், இதிற் **கந்தழி** என்ற இடத்தில் **காந்தளே** நிற்றற்கு அமைவுடையபாடமாதல்வேண்டும் : நாளடைவில் பொருட் பொருத்தங் கருதாமல் ஏடு பெயர்த்தெழுதும் பரிசால் அது சிதைந்து "கந்தழி" யாகிப், பிறகு அதன் பொருத்தமாரா யாது உரைகாரர் தத்தமக்குத் தோன்றியவாறு பொருளுரைக்க அப்பாடமே நிலைத்ததுபோலும். இயற்பொருத்தம் தேராமல் கண்டாங்குக் கந்தழிப்பாடங் கொண்ட வுரைகாரரும், அவ ருரையால் மயங்கிய பிறரும், அதன் பொருளும் பொருத்தமும் தெளிந்து துணியமுடியாமல் தம்முள் மாறுபட்டு மறுகுவ தொன்றே அப்பாடத் தியைபின்மையைத் தெளிப்பதாகும். இதை நச்சினார்க்கினியர் பாடாண் பரிசழித்து அருவான கடவுளாக்குவர், அது பாடாண்புறத்துறையாகாமையை ஆன் ருேர் பழைய செய்யுட்களில் ஆட்சியின்மை வலியுறுத்தும். இளம்பூரணர் கந்தழியியல்பை விளக்காமல் "அன்றெறிந் தானு" மெனும் வெண்பாமாலைப் பாட்டைக் காட்டியமைவர். அப்பாட்டு உழிஞைவகையாதலொன்றே, வெட்சிவகை குறிக்கு மிங் கது பொருந்தாமை துணியப் போதிய சான்றும்.

இனி, (i) 'கொடிநிலை' வெட்சிப்பாடாணுய்க் கடவுள் வாழ்த்தொடு வருதற்குச் செய்யுள் வருமாறு :—

(1) " புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப்
போகுங் காலைக்
கொள்ளுங் கொடியெடுத்துக் கொற்றவையுங்
கொடுமரமுன் செல்லும் போலும் "
(சிலப்பதிகாரம்—வேட்டுவவரி.)

நன்கொடைகள்

இராதாகிருட்டின தொடக்கப் பள்ளிக்கூடம்

அரசியலார் உதவித் தொகை ரூ. 700—11—0

உமாமகேசுவர நடுத்தரப் பள்ளிக்கூடம்

அரசியலார் உதவித் தொகை ரூ. 1017—0—0

ஏழை மாணவர் நிதி

திரு. இராசேசுவரியம்மை, வடக்குவீதி, தஞ்சை, நெல் கலம் 10

,, மைனர் சண்முகசுந்தரம் கார்டியன் மாணிக்கம்பிள்ளை அவர்கள், மகர்நோம்புச்சாவடி, தஞ்சை, நெல் கலம் 4

,, அம்மன்பேட்டை மிராசுதார்கள் வரவு நெல் கலம் 14-5/6

,, வடகால் மிராசுதார்கள் வரவு நெல் கலம் 11½

,, N. சாமிநாதபிள்ளை அவர்கள், அம்மன்பேட்டை ரூ. 2-0-0

,, T. P. வேதாசலம்பிள்ளை, B. A. அவர்கள், தமது உடன்பிறந்தார் நினைவுக்கு 10-0-0

,, N. P. சுந்தரம்பிள்ளை B. A. அவர்கள், கோயமுத்தூர் 9-0-0

,, சிவநேசன் செட்டியார் அவர்கள், பண்ருட்டி 1-0-0

புலவர் கல்லூரி

,, அ. ஜினகுமாரமுதலியார் அவர்கள், கரந்தை 0-8-0

மருத்துவசாலை

,, K. தியாகராசபிள்ளை அவர்கள் B. A. கல்கத்தா 50-0-0

திக்கற்றமாணவரில்லம்

அரசியலார் உதவித்தொகை (2-ம் பகுதி) 239-0-0

,, R. C. வேங்கடராம நாயுடு அவர்கள், குடந்தை தமது தாயார் நாளில் மாணவர் நல்லுணவுக்கு 15-0-0

நூல்நிலையம்

அரசியலார் உதவி 300-0-0

தமிழவேள் நினைவு

,, தி. இராதாகிருட்டினநாயுடு அவர்கள் B. A., B. L. தஞ்சை (6-வது தவணை) 5-0-0